**அவசரக் கூட்டம்**

**கூட்ட எண் – 6 / 2020** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 10.03.2020**

நிகழும் விகாரி ஆண்டு, மாசி மாதம் – 27, திருவள்ளுவர் ஆண்டு 2051 நாள்.10.03.2020 செவ்வாய்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

14-வது மத்திய நிதிக்குழு திட்ட பணியில் மூன்று சிப்பம் பணிகள் ரூ.142.00 லட்சத்திற்கு **27.01.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற தொழில் நுட்ப ஒப்பந்தப் புள்ளிகளில் தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி 27.02.2020 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>14-வது மத்திய நிதிக்குழு 2019 –20</u>**

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்) | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.13, சன்னதி தெரு, வார்டு எண்.13,மேட்டுத் தெரு, வார்டு எண்.15, நரசிம்ம சாமி கோயில் தெரு, வார்டு எண்.11, எம்.ஜி.ஆர் நகர் மற்றும் வார்டு எண்.14, நகராட்சி அலுவலக வளாகம், ஆகிய இடங்களில் சிமெண்டு சாலை அமைத்தல் பணி. | 50.00 | 1. M/s.N.Loganathan & Co.,<br>No. 524, Perambur Village,<br>Sulaimeni Post, Uthukottai Talik,<br>Tiruvallur Dist – 602 026.<br>4.98 % மதிப்பீட்டை விட அதிகம்<br>2.G.Velu,<br>No.28, Chandravilasapuram<br>(Village & Post),<br>Pallipat Taluk, Tiruvallur Dist.<br>**9.97** % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்.6, ஆறுமுகசாமி கோயில் தெரு, வார்டு எண்.5,முருகப்பா நகர், வார்டு எண்.1, சுப்பிரமணிய நகர், வார்டு எண்.1, பாரதிதாசன் தெரு மற்றும் வார்டு எண்.9, டி–புதூர் தெரு ஆகிய இடங்களில் சிமெண்டு சாலை அமைத்தல் பணி. | 50.00 | **1.** திரு. JM Construction,<br>நெ.166, ஹரே ராம நகர்,ராஜாஜி புரம்,<br>திருவள்ளூர்.<br>4.96% மதிப்பீட்டை விட அதிகம்<br>**2.** திருவாளர், பி.சரவணன்,<br>நெ.2/141, பெரிய தெரு,<br>பட்டாபிராமபுரம், திருத்தணி<br>8.47% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.10, பெரியார் நகர், வார்டு எண்.20, பஜார் தெரு, வார்டு எண்.15, பஜனை கோயில் தெரு, வார்டு எண்.15, கஸ்தூரி பாய் தெரு மற்றும் வார்டு எண்.15, கம்மவாரி மடம் தெரு ஆகிய இடங்களில் சிமெண்டு சாலை அமைத்தல் பணி. | 42.00 | 1.திரு.சி.என்.ஆறுமுகம்<br>நெ.15, துர்கையம்மன் கோயில் தெரு, தணிகேசன் நகர் (ஜெ.ஜெ.ரவி நகர்), திருத்தணி.<br>4.97 % மதிப்பீட்டை விட அதிகம்<br>2. திரு. JM Construction,<br>நெ.166, ஹரே ராம நகர்,ராஜாஜி புரம், திருவள்ளூர்.<br>9.97 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக விலைவிகிதத்தில் குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்த நிறுவனத்தற்கு பணி உத்திரவு வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டிற்கு அதிகமாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மேற்கண்ட பணியினை மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. நிதி ஒதுக்கீட்டு தொகை போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேலும் மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசூரம் செய்தமைக்கான விளம்பர கட்டணத்தினை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 2**

இந்நகராட்சி பகுதியில் வாழும் பொது மக்களுக்கு, குடிநீர் வழங்க அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு வழங்கப்பட்டு வந்தது, தற்போது நிலவிவரும் வறட்சியின் காரணமாக தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் நீர் வற்றி விட்டதால் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க சிரமமாக உள்ளது, எனவே பொது மக்களின் நலன் கருதி தலைமை நீரேற்று நிலையத்தின் அருகில் உள்ள தனியார் ஆழ்துளை கிணற்றில் இருந்து குடிநீரை மின்மோட்டார் மூலம் எடுத்து தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள சேகரிக்கும் தொட்டியில்விட மாத வாடகைக்கு கீழ் கண்ட நபர்கள் இசைவு தெரிவித்து நகராட்சிக்கு கடிதம் வழங்கியுள்ளார்கள்.

1. K.கிருஷ்ணன்
   த/பெ.கண்ணன்,
   நெ.23, பெரியகோயில் தெரு,
   அருங்குளம்.
2. E.ஆறுமுகம்
   த/பெ.இல்லப்ப ரெட்டி,
   பஜனை கோயில் தெரு,
   அருங்குளம்.
3. K.பரந்தாமன்
   த/பெ.குப்பாரெட்டி,
   ஈஸ்வரன் கோயில் தெரு,
   அருங்குளம்.

மேற்கண்ட நபர்கள் மாத வாடகையாக ஆழ்துளை கிணறு ஒன்றுக்கு ரூ.30,000/– வீதம் ஒவ்வொரு நபரும் ஒரு ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வழங்க சம்மதம்தெரிவித்துள்ளனர், எனவே 04/2020 முதல் மாத வாடகை அடிப்படையில் குடிநீர் பெற தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வறட்சி காலமாக உள்ளதாலும் பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதி 04/2020–ஆம் மாதம் முதல் மேற்கண்ட நபர்களிடம் குடிநீர் பெற மாத வாடகையாக ஆழ்துளை கிணறு ஒன்றுக்கு ரூ.30,000/– வீதம் வாடகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**<u>பொருள் எண்– 3</u>**

இந்நகராட்சியின் காந்திஜி நூற்றாண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் திருத்தணி ஏரியில் இயங்கும் மின் மோட்டார்களை தனியார் மூலம் பம்பு ஆப்ரேட்டர்களை கொண்டு 2020–21 ஆம் ஆண்டிற்கு (ஏப்ரல்–2020 முதல் செப்டம்பர்–2020 வரை) இயக்குதல் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.10 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**